2016 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 106, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

106—

சமுதாயக் கூடம்

***2872 திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தொகுதி, அத்தியூர் ஊராட்சி, அத்தியூர் ஆதி திராவிடர் தெருவில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தமிழகத்தின் இடர்களைப் போக்கும் ஒரு மந்திரம், இன்பத்தை நாளும் தரும் மந்திரம், தமிழனை உயர்த்தும் தனி மந்திரம், அதுவே 'எங்கள் அம்மா' என்னும் பெரு மந்திரம். (மேசையைத் தட்டும் ஒலி) கடையேழு வள்ளல்களைக் காகிதத்தில் பார்த்ததுண்டு, படித்ததுண்டு. ஆனால், நேரில் பார்த்தது, 'அம்மா'-வின் வடிவில்தான். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் திருவடி வணங்கி, என் பதிலை அளிக்கின்றேன்.

கும்பகோணம் தொகுதியில் அத்தியூர் ஊராட்சியில், அத்தியூர் கிராமத்திலுள்ள ஆதி திராவிட மக்களின் எண்ணிக்கை, தேவையான இடம், போதுமான நிதி ஒதுக்கீடு ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு, துறை அலுவலர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, பெறப்படும் ஆவணங்களைப் பரிசீலனை செய்து, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 107, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

107—

சிற்பக் கூடம்

***1877—திரு. பா. ஆறுமுகம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்தர்வகோட்டை தொகுதி, நார்த்தாமலையில் சிற்பக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் கங்கை ஆறு, யமுனை ஆறு, பாலாறு என்று பல ஆறுகள் உண்டு. ஆனால், வற்றாத ஒரே ஆறு மாண்புமிகு அம்மா, உங்கள் வரலாறு. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் திருவடிகளை வணங்கி விடை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை தொகுதி, நார்த்த மலையில் சிற்பக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம் அவர்கள்.*